விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 186 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 09 திங்கட்கிழமை (23.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal
றோயல் சுத்தமான தேன்
ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3249)
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

### ஐ.நா மனித உரிமை ஆணையர்

## செம்மணிக்குச் செல்ல தடை ஏதும் இல்லை



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையர் வோல்கர் டேர்க் செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிடுவதற்கு தடையற்ற அனுமதி வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையர் அந்தப் பகுதியில் விஜயம் மேற்கொள்வதற்கும் மக்களைச் சந்திப்பதற்கும் தடையற்ற அனுமதி வழங்கப்படும்.

02ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.குடாநாட்டை உலுப்பிய மினி சூறாவளி



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்று மாலை 6.30 மணியளவில் திடீரென பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்ததால்

15ஆம் பக்கம் பார்க்க

## அணையா விளக்குப் போராட்டத்துக்கு ஆதரவாகத் தீப்பந்தப் போராட்டம்

### மட்டக்களப்பில் இன்று முன்னெடுப்பு

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப் பாத்தியில் இன்று திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படவுள்ள அணையா விளக்குப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும்

15ஆம் பக்கம் பார்க்க

### ஈரான் மீது அமெரிக்கா குண்டுவீச்சு

# 3 ஆம் உலகப் போர் வெடிக்கும் அபாயம்

(தெஹ்ரான்)

ஈரானில் உள்ள மூன்று அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்க யுத்த விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. இதனால் எந்த நேரமும் உலகப் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)



### தமிழர் நலனில் அதீத அக்கறை இருந்தால்

## எமது காணிகளை அநுர அரசு உடன் விடுவிக்க வேண்டும்

### மயிலிட்டியில் 2ஆவது நாளாகவும் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

### ஹோர்முஸ் நீரிணை மூடப்படலாம்

## மசகு எண்ணெய் விலை உயர்வடைய வாய்ப்பு!

(தெஹ்ரான்)

சர்வதேச மசகு எண்ணெய் வர்த்தகத்தில் முக்கிய பங்காற்றும் ஹோர்முஸ் நீரிணையை மூடுகின்ற அயதுல்லா அல்



02ஆம் பக்கம் பார்க்க

## போதைவஸ்துக்களுடன் யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கஞ்சா கலந்த மாவா பாக்கு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் கஞ்சா போதைப் பொருள் கலந்த மாவா பாக்கு வியாபாரத்தில் ஈடுபட்டு வருவ

02ஆம் பக்கம் பார்க்க

## தோட்டக் கிணற்றிலிருந்து குடும்பப் பெண் சடலமாக மீட்பு

### வசாவிளானில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியிலுள்ள தோட்டக் கிணறொன்றிலிருந்து குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் வசாவிளான் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த கிருபாமூர்த்தி கலா (வயது-55)

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் கோர விபத்து

### ஒருவர் பலி : ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் பாடுகாயமடைந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காத்தும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

கடந்தகால மனித உரிமை மீறல்களை கையாள்வது குறித்து நாட்டின் நல்லிணக்கத்திற்கான தனது அர்ப்பணிப்பு குறித்த நேர்மையை வெளிப்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்புவதால் மனித உரிமை ஆணையாளர் மக்களைச் சந்திப்பதற்கும் அனைத்து இடங்களிற்கும் செல்வதற்கும் எந்த தடையையும் விதிக்கப்போவதில்லை என வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் ஒருவர் ஒன்பது வருடங்களின் பின்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக 2016 பெப்ரவரியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்தவேளை செய்த்ராத் அல்ஹுசைன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

சர்வதேச சமூகத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை கரிசனைகளை எவ்வாறு கையாள்வது எனத் தெரியாமல் அரசாங்கம் தடுமாறிக்கொண்டிருக்கின்ற ஒரு நிலையில் இப்போது அவுஸ்திரேலிய பிரஜையான வோல்க்கெர் டேர்க் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலிற்கு முன்னதாகக் கடந்த வருடம் ஆகஸ்ட்மாதம் ஐ.நா. பேரவை ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் புதிதாகத் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் இனமோதலிற்கான அடிப்படை காரணங்களிற்கு தீர்வை காண வேண்டும் என வலியுறுத்திருந்தார்.

பொறுப்புக்கூறலில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கும் நல்லிணக்கத்தை நோக்கி முன்னேறுவதற்கும் அரசாங்கம் அடிப்படை அரசமைப்பு நிறுவன ரீதியான மாற்றங்களை முன்வைக்கவேண்டும் என அவர் தெரிவித்திருந்ததுடன்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும், என்ற பரிந்துரையையும் அவர் முன்வைத்திருந்தார்.

வோர்க்கெர்டேர்க்கிற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளராகப் பணியாற்றிய மிச்செலே பச்செலெட் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான விருப்பத்தை வெளியிட்டிருந்தார். எனினும் அது சாத்தியமாகவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் போர்கால உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்களை சேகரிப்பதற்காக பொறுப்புக்கூறல் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இலங்கை இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மசகு எண்ணெய்...

கமேனியின் விருப்பத்திற்கு ஈரான் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேச அளவில் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெய் எரிவாயு விநியோகங்கள் ஹோர்முஸ் நீரிணையூடாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

அமெரிக்கத் தாக்குதலையடுத்து ஹோர்முஸ் நீரிணை வழித்தடத்தை முடக்குவதற்கு ஈரான் பாராளுமன்றத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான இறுதித் தீர்மானத்தை அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு பேரவையால் மேற்கொள்ளப்பட வேண்டும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலகில் பயன்படுத்தப்படும் எண்ணெயின் 20 சதவீதம் இந்த நீரிணையூடாகவே கொண்டுசெல்லப்படுகின்றது.

எந்தவகையிலேனும் ஹோர்முஸ் நீரிணையை மூடுவதற்கு ஈரான் நடவடிக்கை எடுக்குமாயின் அது உலக பொருளாதார நிலைமையை மேலும் சீர்குலைக்கும் என்பதுடன் மசகு எண்ணெய் விலைகளும் அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

எனினும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கான யுரேனியம் திட்டத்திற்கு அமெரிக்கா உடன்படப்போவதில்லை என அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-7)

## ஈரான் – இஸ்ரேல் மோதல்

# அரசின் முன்னாயத்த திட்டங்கள் தொடர்பில் எதிர்க்கட்சி கேள்வி

ஈரான் - இஸ்ரேல் மோதலானது இலங்கையின் பொருளாதாரத்தில் நேரடியாக பாதகமான தாக்கத்தை செலுத்தும். அவற்றை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே முன்னாயத்தங்களை செய்ய வேண்டும். ஆனால் அரசாங்கத்திடம் அவ்வாறு எவ்வித முன்னாயத்தங்களும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஈரான் - இஸ்ரேல் மோதல் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி துறையில் நேரடியாக பாதகமான தாக்கத்தை செலுத்தும்.

எமது நாட்டின் தேயிலை ஏற்றுமதியில் ஈரான் முன்னிலையிலுள்ளது. அது மாத்திரமின்றி மத்திய கிழக்கில் எரிபொருள் விநியோகத்தில் ஈரான் பிரதான பங்கினை வகிக்கிறது. மறுபுறம் இஸ்ரேலில் அதிகளவான இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களால் எம்மைப் போன்ற சிறிய நாடுகளின் பொருளாதாரம் பாரியளவில் பாதிக்கப்படும்.

அத்தோடு டொலர் நெருக்கடியும் ஏற்படும். எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு முன்னாயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு இதுவரை அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது எனநாட்டு மக்கள் சார்பில் கேள்வியெழுப்புகின்றோம் என்றார். (ந-7)

## போதைவஸ்...

தாக, பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து விற்பனைக்காக வைத்திருந்த ஒரு கிலோகிராம் மாவா பாக்கினை பொலிஸார் மீட்டுள்ளதுடன்,

குறித்த நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,33)

## 3 ஆம் உலக...

ஈரான் - இஸ்ரேல் யுத்தம் தீவிரமடைந்து வருகின்ற நிலையில், இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதலை சரமாரியாக மேற்கொண்டு வருகிறது.

ஈரானின் இந்த அதிரடித் தாக்குதலால் இஸ்ரேல் நிலை குலைந்துள்ளது.

இந்நிலையில் களமிறங்கிய அமெரிக்கா நேற்று தனது யுத்த விமானங்களை அனுப்பி ஈரானின் மூன்று முக்கிய அணுவாயுத நிலையங்கள் மீது குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த தாக்குதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தாக்குதலை நடத்திய விமானங்கள் ஈரானில் இருந்து வெளியேறிவிட்டதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல், சர்வதேச சட்டத்தை மீறுகின்ற அப்பட்டமான செயல் என ரஷ்யா தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

தவிர, அமெரிக்காவின் தாக்குதலைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை மேசைக்கு வாருங்கள் என பிரித்தானியப் பிரதமர் ஈரானைக் கேட்டுள்ளார்.

கூடவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஈரானிய ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பதற்றத்தை தணிப்பதற்கு உதவுமாறு கேட்டுள்ளார். (ந-7)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:


076 097 3127

021 221 7603

/ - 076 636 3378

E.mail: Valampurii@yahoo.com


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்

திருமதி ஜெயகாந்தன் பிரவீனா

அவர்களுடைய பாசமிகு தந்தை

அமரர்

இரா.பாலச்சந்திரன்

அவர்கள் இறைபதமடைந்த செய்தியை அறிந்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

(C-3251)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுமன்னிப்பு விவகாரம்

# முழுப்பொறுப்பையும் நீதியமைச்சு ஏற்க வேண்டும்

### முன்னாள் நீதியரசர் விஜயதாச சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதி பொதுமன்னிப்பு முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமைக்கான முழு பொறுப்பையும் நீதியமைச்சே ஏற்க வேண்டும் என முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சிறைக்கைதிகளின் பெயர்கள் மற்றும் பரிந்துரைகளுடன், ஜனாதிபதிக்கு நீதியமைச்சினால் அனுப்பப்பட்ட கடிதத்தில், பல குறைபாடுகள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

நீதியமைச்சினால், ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்த குறித்த கடிதத்தில், அபராதம் செலுத்த முடியாதமையால் தண்டனை பெறுபவர்களுக்கு பொதுமன்னிப்பு அளிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

எனினும், அவ்வாறான நபருக்கு எதிராக வேறு ஏதேனும் வழக்குகள் இருந்தால், அவரை விடுவிக்கக் கூடாது என்ற நிபந்தனை மற்றும் அளவுகோல்கள், அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அதனடிப்படையிலேயே, 20 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருந்த நபரொருவரும் விடுதலையாகியுள்ளார் என தெரிவித்தார். (நி)

# ஜூன் 30 ஆம் திகதி

## பாராளுமன்ற விசேட அமர்வு



(கொழும்பு)

எதிர்வரும் 30ஆம் திகதி பாராளுமன்ற விசேட அமர்வு நாளாக அறிவிக்க பாராளுமன்ற அலுவல்கள் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 11 ஆம் சரத்துக்கு அமைவாக வருடாந்தம் ஜூன் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பாராளுமன்றம் கூடுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். (நி)


ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### தேவராசா நிரோஜ்

அன்னை மடியில் 20.08.1999

ஆண்டவன் மடியில் 23.06.2016

ஓடியது ஒன்பது ஆண்டுகள்
இன்றும் நீ வேண்டுமடா எமக்கு
நீ! இல்லாத வீடு நிலவில்லா
வானம் போல் உள்ளதையா
உன்னை என்றும்
மறக்க முடியாதவர்கள்

காளி கோவிலடி,
தாவடி வடக்கு, தாவடி.

(4616)

உன் நினைவுடன்...
குடும்பத்தினர்



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திரு.

### தயாநிதி கஜேந்திரன் (இராஜா)



திதி வெண்பா

ஆண்டு மன்மத ஆனிமாதத் திங்கள் அன்று
காண்தகு அமரபக்கத் திரியோதசி திதி தன்னில்
கஜேந்திரன் சென்றனன் விண்ணுலகம் எமை
மீளாத் துயரில் ஆழ்த்தி

எம் இராஜாவே உனை இழந்து
தவிக்கும் தாயின் புலம்பல் கேட்கவில்லையா?
உன்னுடன் விளையாடி மகிழ்ந்த
அண்ணன்மார்களின் ஏக்கம் தெரியவில்லையா?
பத்தாண்டுகள் ஓடி மறைந்து விட்டதே
உன்னுடன் வாழ்ந்த காலங்களை
நினைத்துப் பார்க்கவே இனியொரு முறை
அந்த இன்பம் வந்திடாதா என
எம் நெஞ்சம் ஏங்கித் தவிக்கிறதே எம் செல்வமே

இந்திர பிரஸ்தம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(C-3214)

உம் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மகளிர் ரி-20 கிரிக்கெட் தொடர்
## தென்னாபிரிக்க அணி அபார வெற்றி



தென் ஆபிரிக்க மகளிர் கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் தென் ஆபிரிக்கா கைப்பற்றியது.

இதையடுத்து ரி-20 தொடரின் முதல் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 183 ஓட்டங்கள் குவித்தது. தென் ஆபிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக டாஸ்மின் பிரிட்ஸ் 98 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து 184 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மேற்கிந்திய அணி 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 133 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென் ஆபிரிக்கா அபார வெற்றி பெற்றது. (3)

## டெஸ்ட் தொடரிலிருந்து விலகினார்
## தென்னாபிரிக்க கப்டன் பவுமா

தென்னாபிரிக்க அணி சமீபத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறு திப் போட்டியில் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன், சம்பியன் பட்டத்தையும் வென்று சாதித்துள்ளது.


இதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அணி இம்மாத இறுதியில் ஜிம் பாப்வேவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதில் இரு அணிகளுக்கும் இடையேயான முதல் போட்டி இம்மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



இத்தொடருக்கான டெம்பா பவுமா தலைமையிலான தென் ஆபிரிக்க அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அணியில் லுவான் ட்ரே பிரிட்டோரியஸ், லெசெகோ செனோக் வானே, கோடி யூசுஃப், டெவால்ட் பிரீவிஸ் மற்றும் ப்ரீனெலன் சுப்ரயன் உள்ளிட்ட அறிமுக வீரர்கள் இடம் பிடித்துள்ள நிலையில், ஐடன் மார்க்ரம், காகிசோ ரபாடா, மார்கோ ஜான்சன் உள்ளிட்ட நட்சத்திர வீரர்களும் இடம் பிடித்தனர்.

அவர் விலகியுள்ள நிலையில் ஜிம்பாப்வே டெஸ்ட் தொடருக்கான தென் ஆபிரிக்க அணியின் கப்டனாக கேசவ் மகாராஜ் செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## பாரிஸ் டயமண்ட் லீக் தொடர்
## பட்டம் வென்றார் நீரஜ்



பாரிசில் டயமண்ட் லீக் ஈட்டி எறிதல் தொடர் அண்மையில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா பட்டத்தை வென்றதன் மூலம் உலக அரங்கில் தனது ஆதிக்கத்தை மீண்டும் நிரூபித்தார்.

அண்மையில் நடந்த போட்டியின் முதல் சுற்றிலேயே 88.16 மீற்றர் தூரம் எறிந்தார்.

நடு சுற்றுகளில் 3 புள்ளிகள் இல்லாதபோதும், அவரது தொடக்க முயற்சியே போட்டி முழுவதும் அவரை முதலிடத்தில் வைத்திருந்தது.

ஜேர்மனியின் ஜூலியன் வெபர் 87.88 மீற்றர்தூரம் எறிந்தார்.

பிரேசிலின் மௌரிசியோ லூயிஸ் டா சில்வா 86.62 மீற்றர் தூரம் எறிந்து 3 ஆவது இடத்தையும் பிடித்தனர். (3)

## "குருவை மிஞ்சிய சிஷ்யன்"
## ரிஷப் பண்ட் புதிய சாதனை



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் குறைந்த இன்னிங்ஸில் 3,000 ஓட்டங்களைக் கடந்த இந்திய விக்கெட் காப்பாளர் என்ற சாதனையை ரிஷப் பண்ட் படைத்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவர் குறித்த சாதனையை தன் வசப்படுத்தினார்.

முன்னதாக 144 இன்னிங்ஸில் மஹேந்திர சிங் தோனி 3,000 ஓட்டங்களை கடந்ததே சாதனையாக இருந்தது. தற்போது 76 இன்னிங் ஸில் 3,000 ஓட்டங்களை கடந்து தோனியின் சாத னையை ரிஷப் பண்ட் முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## கழகங்களுக்கிடையிலான தடகளப்போட்டி
## விநாயகர் கழகம் தங்கம் வென்று சாதனை

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டியில் ஆண்களுக்கான நீளம் பாய்தலில் விநாயகர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஏ.தனோஜன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.



இதில் ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் விநாயகர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஏ.தனோஜன் தங்கப் பதக்கத்தையும், விநாயகர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஐ.அபிநயன் வெள்ளிப் பதக்கத்தையும் கணேசன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜி.லக்சிகன் வெண்கலப்பதக்கத் தையும் கைப்பற்றினர். (3-90)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலுசக்தி உற்பத்திக்கு உலக வங்கி நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் தூய, தரமான, குறைந்த செலவிலான வலுசக்தி உற்பத்தி செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்காக 150 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவதற்கு உலக வங்கிக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

இச்செயற்றிட்டத்தின் ஊடாக இலங்கையினால் குறைந்த செலவில் பாதுகாப்பானதும், நிலைபேறானதுமான வலுசக்தியை உற்பத்தி செய்யமுடியும் எனவும், இது அதிக செலவில் இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருளில் நாடு தங்கியிருப்பதைக் குறைப்பதற்கும், சோலார் மற்றும் காற்று மூலமான வலுசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உதவும் எனவும் உலக வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

"இச்செயற்றிட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் உள்ள குடும்பங்களுக்கும் வணிகங்களுக்கும் குறைந்த விலையில், தீங்கற்ற மின்சாரத்தை விநியோகிக்க முடியும்.

இந்த இலக்கை யதார்த்தபூர்வமாக அடைந்துகொள்வதை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்துடனும் தனியார் துறையினருடனும் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்" என மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் டேவிட் சிஸ்லென் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வலுசக்தி உற்பத்தியில் இலங்கை அடையவிருக்கும் நிலைமாற்றமானது தூய வலுசக்தி உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கும், வலுசக்திக் கிடைப்பனவை மேம்படுத்துவதற்கும், நீண்டகால அடிப்படையிலான வலுசக்தி மீளெழுச்சியைக் கட்டியெழுப்புவதற்கும் வாய்ப்பாக அமையும் என சர்வதேசநிதிக்கூட்டுத்தாபனத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் இமாத் என் ஃபகோரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)

# தமிழ்நாட்டில் ஒதுங்கிய இலங்கை படகு

## பொலிஸார் தீவிர விசாரணை

(சென்னை)

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை பழைய கலங்கரைவிளக்கம் அருகே இலங்கை நாட்டைச் சேர்ந்த புதிய பைபர் படகு இயந்திரத்துடன் கரை ஒதுங்கி உள்ளது.

கோடியக்கரை கடற்கரையில் ஆள் இல்லாமல் சந்தேகத்துக்கு இடமாக ஒரு படகு கரை ஒதுங்கி இருப்பதாக மீனவர்கள் பொலிஸாருக்கு தகவல் அளித்தனர்.

தகவல் அறிந்த வேதாரண்யம் பொலிஸார் உடனடியாக விரைந்து சென்று அந்தப் படகை ஆய்வு செய்தனர். அந்தப் படகு இலங்கை நாட்டைச் சேர்ந்த படகு என்பது படகு பதிவு எண்ணை வைத்து உறுதிப்படுத்தினர்.

அந்தப் படகில் மீன்பிடி வலை, வெளியிணைப்பு இயந்திரம் உள்ளிட்டவை உள்ளது. பொலிஸார் திவீர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(2235)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615 6719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

077 839 3974

பணியாளர்கள் தேவை

● கணனி உதவியாளர்

● கணக்காளர் (ஆண்/ பெண்)

தொடர்புகளுக்கு

076 315 6470

(c-3245)

மணமகன் தேவை

1987 ஆம் ஆண்டு பிறந்த வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சுவாதி, கிரகபாவம் 28, செவ்வாய் குற்றமற்ற கனடாவில் Student visa வில் படிக்கும் மணமகளுக்கு கனடா, சுவிஸ், லண்டனில் நிரந்தரமாக வசிக்கும் மணமகன் தேவை.


077 350 9279

077 371 6138

(c-3243)

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 16 . 04 . 1956



மறைவு 22 . 06 . 2025

எமது நண்பன் மயூரனின் அன்புத் தந்தையார்

அமரர். தம்பிப்பிள்ளை திருநாதன்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(4617)

யாழ்.இந்துக்கல்லூரி, 2002 உயர்தரப்பிரிவு நண்பர்கள்.


# இராசிபலன்

23.06.2025
ஆனி 09, திங்கட்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.13 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 2.26 மணிவரை

சுபநேரம் 11.54-1.24 மணிவரை
இராகுகாலம் 7.24-8.54 மணிவரை
பிரதோச விரதம்
புதூர் நாகதம்பிரான் பொங்கல்

சந்திராஷ்டமம்- சித்திரை, சுவாதி

வளவன்

**மேஷம்:** துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**கடகம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அதிஷ்ட வாய்ப்புகள் அலைமோதும் நாள்.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது நல்லது, சேமிப்புகள் கரையும் வாய்ப்புண்டு, குடும்பத்திற்கிடையே விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது.

**மகரம்:** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், உறவினர் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**ரிஷபம்:** திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், பலநாட்களாகப் பார்க்க நினைத்த நபரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்

**சிம்மம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்கள் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், பயணங்களினால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அக்கறை கூடும்.

**மிதுனம்:** புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் சிறு மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வுகள் குறையும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**தனுசு:** இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**மீனம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று முடிவுக்கு வரலாம்.

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான், தெரியாதவன் போதிக்கிறான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணையாவிளக்கு போராட்டத்திற்கு அணி திரளுங்கள்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியில் நடைபெறவுள்ள "அணையாவிளக்கு" போராட்டத்திற்கு தமிழர் தேசமாக அனைவரும் அணி திரள வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிவிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதிகோரியும், சர்வதேசக் கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழ்வை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியும் 'மக்கள் செயல்' என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பால், இன்றைய தினம் திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரையிலான மூன்று நாட்கள் செம்மணி வளைவுப் பகுதியில் 'அணையா விளக்கு' போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சிவில் சமூக அமைப்புகள் இணைந்து அணையா விளக்கு என்ற போராட்டத்தை மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது.

நாங்கள் ஒரு பங்காளராக பங்கேற்று முற்றுமுழுதாக வடக்கு கிழக்கில் மிகப்பெரிய அழைப்பை முன்னெடுக்கின்றோம். எமது உறவுகளுக்காக உயிரிழந்த உறவுகளுக்காகவும் இழைக்கப்பட்ட அநீதிக்காகவும் தமிழ் தேசமாக திரண்டு போராட்டத்தில் ஒன்று சேர வேண்டும்.

இலங்கைக்கு தற்போது வருகைதரவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்ய உள்ளதாக அறிய முடிகிறது. மிக முக்கியமாக செம்மணி சித்துபாத்தி இந்து மயானத்தை, மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதியை மனிதப் புதைகுழியாக அறிவிக்க வேண்டும். தொடர்ச்சியாக சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டு சர்வதேசத்தின் முற்றுமுழுதாக தலையிட்டு அகழ்வாய்வை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையை திசை திருப்பவே மனித உரிமைகள் ஆணையாளரை இலங்கை அரசாங்கம் அழைத்துள்ளது. வடக்கு கிழக்கு தமிழர்கள் இந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி எங்கள் பிரச்சினைகளையும் மனித புதைகுழிகள் தொடர்ச்சியாக தோண்டப்படும் விடயங்களையும் வெளிப்படுத்த வேண்டும் என்றுள்ளது. (8-33)

# மோகனதாஸ் சுவாமிகளுக்கு "தேசாபிமானி" விருது



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர், சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமி அவர்களுக்கு , ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பினரால் "தேசாபிமானி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் மனித உரிமைகளுக்கான மாகாண பணிப்பாளர் என்ற உயரிய பதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

கொழும்பு அருங்காட்சியகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்விலேயே மேற்படி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-8-33)

# இந்தியாவிற்கு தப்பிச் செல்ல முற்பட்ட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் புரிந்த மூவர் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த குறித்த மூவரும் யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, வாள்வெட்டு ஆகிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூவரும் இலங்கை - தலைமன்னாரில் இருந்து கடல் மார்க்கமாக இந்தியாவிற்கு தப்பிச் செல்ல முயற்சித்தவேளை கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (8-104)



யாழ்ப்பா ணச் சிறைக் கைதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக சுன் னாகம் பாரம் பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக ஒரு தொகைப் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. எலிபன்ற் எயிட் ஹெல்பிங் கியூமன் அமைப்பின் நிதிப் பங்களிப்பின் மூலம் மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்- சுபேசன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 250 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 160 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 650 | 800 |
| தக்காளி | 350 | 400 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 250 | 220 | 250 |
| கோவா | 450 | 500 | 500 | 400 | 500 |
| கரட் | 600 | 650 | 500 | 650 | 600 |
| பூசணி | 140 | 180 | 160 | 150 | 200 |
| புடோல் | 120 | 160 | 150 | 130 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 140 | 110 | 150 |
| பாகற்காய் | 700 | 600 | 700 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 280 | 300 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 300 | 400 | 350 | 380 | 400 |
| கறிமிளகாய் | 500 | 550 | 600 | 520 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | 1400 | 1000 | 1300 | 1400 |
| போஞ்சி | 700 | 800 | 700 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 180 | 200 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 60 | 20-80 | 60 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 180 | 180 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 650 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 500 | 600 | 600 |
| முள்ளங்கி | 200 | 150 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | 120 | -- | 200 |

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஈவினை அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ மஹாகும்பாபிசேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.01 மணி முதல் 10.29 மணி வரையான சுப முகூர்த்த சுப வேளையில் இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மதியம் 12 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாற்ற முடியுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-33)

# 3 நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

குழந்தை சத்திர சிகிச்சை நிபுணரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்தியர் பா.சயந்தன் எழுதிய குழந்தை சத்திர சிகிச்சை தொடர்பான மூன்று நூல்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன் தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திற்கென யாழ் நகரில் அமைக்கப்பட்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தொகுதிக் கட்டடத்தில் நேற்று சனிக்கிழமை குறித்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தனர். (8-33)



வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாணவர்களின் கல்விக்கு 180 மில்லியன் ரூபா- சபாநாயகர்

(தருமபுரம்)

வடக்கு மாகாணத்தில் மாணவர்களின் கல்வியை மேம்படுத்த எதிர்காலத்தில் 180 மில்லியன் ரூபாவை ஒதுக்க தீர்மானித்துள்ளோம்.

கடந்த 2023/2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் உயர் திறமைகளை வெளிப்படுத்திய சிறந்த மாணவர்களை கௌரவிக்கும், ஜனாதிபதி நிதியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கிளிநொச்சி நெலும் பியசவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி நிதியத்தின் ஊடான சேவைகள் வழங்கலில் கடந்த காலங்களில் பாரபட்சம் இருந்தது. அத்துடன் மக்கள் கொழும்பை நோக்கி வரவேண்டியிருந்தது. அது மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து மருத்துவத் தேவைக்காக மாத்திரமல்ல கல்வி உள்ளிட்ட ஏனையவற்றுக்கும் பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பித்து அதனைப் பெற்றுக் கொள்ள முடியும். அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்ற மிகப் பெரிய பேருந்து விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கும் ஜனாதிபதி நிதியத்திலிருந்தே உதவி வழங்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் மாணவர்களுக்காக 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் எதிர்காலத்தில் 180 மில்லியன் ரூபாவை ஒதுக்கவும் தீர்மானித்திருக்கின்றோம். என்றார். (8-315-316)



கடந்த 2023/2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் உயர் திறமைகளை வெளிப்படுத்திய சிறந்த மாணவர்களை கௌரவிக்கும், ஜனாதிபதி நிதியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கிளிநொச்சி நெலும் பியசவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



யாழ்.மாவட்ட பகிரங்க ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியப் பொதுக் கூட்ட நிகழ்வில் வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஓய்வுநிலை தபால் திணைக்கள பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் நா.சுந்தரம் கௌரவிக்கப்பட்டார்.



35 ஆம் ஆண்டு தியாகிகள் தின நினைவேந்தல் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை மன்னாரில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.விஜயராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்களினால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்ததானமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்-ஜோசப்நயன்)



வவுனியா விபுலானந்தா கல்லூரியில் பதில் அதிபராக கடமையாற்றிய திருமதி மோகனதாஸ் ஞானமதி என்பவர் கடந்த 20 ஆம் திகதி முதல் நிரந்தர அதிபராக வடமாகாணக் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். (படம்- வசந்தரூபன்)

# தருமபுரம் வைத்தியசாலைக்கு இளங்குமரன் எம்.பி விஜயம்



(தருமபுரம்)

கிளிநொச்சி- தருமபுரம் வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் கேட்டு அறிந்துள்ளார்.


கண்டாவளை பிரதேசத்திற்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினரிடம் குறித்த வைத்தியசாலையினுடைய நோயாளர் நலன்புரி சங்கம் மற்றும் பொது மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக வைத்தியசாலைக்குச் சென்று அங்கே இருக்கின்ற குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் வைத்தியசாலை நிர்வாகத்துடன் கலந்துரையாடி உடனடியாக செய்ய வேண்டிய தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை தீர்த்து ஏனைய பிரச்சினைகளை அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதில் குறித்த வைத்தியசாலையினுடைய பொறுப்பு வைத்தியர் மற்றும் வைத்தியசாலை பணியாளர்கள் நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர்.

(8-315-316)

# காட்டுத் தடிகளுடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

விசுவமடு பகுதியில் இருந்து கப்ரக வாகனத்தில் காட்டுத் தடிகளை அனுமதியின்றி வெட்டி கப்ரக வாகனத்தின் மூலம் வேறு பகுதிக்கு கொண்டு செல்ல முற்பட்ட வாகனத்தின் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக வீதி சோதனையின் மூலம் கடந்த 20 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட் சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பொழுது தமது குற்றத்தினை ஒப்பக் கொண்டற்கு அமைவாக பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(8-316)

# தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி மன்னார் மாணவி சாதனை



(மன்னார்)

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு 8,9 இல் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி செல்வி. அ.நயோலின் அப்றியானா மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தையும், தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தையும், மஹரகம ஜனாதிபதி கல்லூரியில் கடந்த ஆவணி மாதம் நடைபெற்ற தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

அவருக்கு சான்றிதழ் கல்வி அமைச்சில் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்னவினால் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவருடன் வட மாகாணத்தை சேர்ந்த இரு மாணவர்கள் இரண்டாம் நிலைகளைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ஈரானைத் தாக்கினால் அமெரிக்க கப்பல்களை அழிப்போம்!

## ஹவுதி சூளுரை



(ஏமன்)

இஸ்ரேலுடன் இணைந்து ஈரானை தாக்கினால், அமெரிக்க கப்பல்களை செங்கடலில் மூழ்கடிப்போம் என்று ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

"ஈரானுக்கு எதிரான தாக்குதலில் அமெரிக்கா இஸ்ரேலுடன் இணைந்தால், ஹவுதி ஆயுதப் படைகள் செங்கடலில் உள்ள அமெரிக்க சரக்குக் கப்பல்கள் மற்றும் போர்க்கப்பல்களை குறிவைக்கும்" என்று ஹவுதி இராணுவ செய்தித் தொடர்பாளர் சஹ்யா சாரி தெரிவித்தார்.

முன்னதாக, காசாவில் இஸ்ரேல் தாக்குதலை தொடங்கிய பின்னர், ஹவுதிகள் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவான கப்பல்களைத் தாக்கினர். இஸ்ரேலை ஆதரிக்கும் நாடுகளின் கப்பல்களை குறிவைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மேலும் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து, ஹவுதிகள் மீது அமெரிக்கா பெரிய அளவில் தாக்குதலை நடத்தியது. மே மாதம் அமெரிக்காவும் ஹவுதிகளும் ஓமானின் மத்தியஸ்தத்துடன் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்தை எட்டினர். இந்த ஒப்பந்தம் செங்கடல் மற்றும் பாப் அல்-மந்தாப் ஜலசந்தியில் இரு தரப்பினரும் ஒருவரையொருவர் தாக்கக் கூடாது என்று கூறுகிறது.

உலகின் வணிகக் கப்பல் போக்குவரத்தில் 40 சதவீதம் செங்கடலில் தான் நடைபெறுகிறது. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கும் சுயஸ் கால்வாய், உலகின் மிகவும் பரபரப்பான கப்பல் பாதையாகும்.

செங்கடல் வழியாக கப்பல் போக்குவரத்து தடைப்பட்டால் அது உலக சந்தைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். முன்னதாக, ஹவுதி தாக்குதலைத் தொடர்ந்து, கப்பல்கள் பாதையிலிருந்து திசைதிருப்பப்பட்டு ஆப்பிரிக்காவின் குட் ஹோப் முனையிலிருந்து சில காலம் பயணம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. (நி)

# அமைதி ஏற்படாவிட்டால் பாரிய தாக்குதல் நடத்தப்படும்

## ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

ஈரானின் 3 அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தாக்குதல்களுக்குப் பிறகும் அமைதி ஏற்படாவிட்டால் மிகப் பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் தாக்குதல் குறித்து ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த டொனால்ட் ட்ரம்ப் ,ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் திறனை அழிப்பதும், பயங்கரவாதத்தை ஆதரிக்கும் முதன்மையான அரசால் முன்வைக்கப்படும் அணுசக்தி அச்சுறுத்தலை நிறுத்துவதும் எங்கள் நோக்கமாகும்.


தாக்குதல்கள் அற்புதமானவை, இராணுவ வெற்றி. ஈரானின் முக்கிய அணுசக்தி செறிவூட்டல் வசதிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கின் மிரட்டலான ஈரான் இப்போது சமாதானத்தை ஏற்க வேண்டும், இல்லையென்றால், எதிர்கால தாக்குதல்கள் மிகப் பெரியதாக இருக்கும் என்று தெரிவித்தார். (நி)

# உக்கிரமடை

# ஈரானின் அ

# தாக்கியது



**(வோஷிங்டன்)**
**ஈரானில் உள்**
**யங்கள் மீது**
**நடத்தியுள்ளதாக**
**தெரிவித்துள்ளா**

ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் எஸ்பஹான் உள்ளிட்ட ஈரானில் உள்ள மூன்று அணுசக்தி நிலையங்கள் மீது தாங்கள் மிகவும் வெற்றிகரமான தாக்குதலை நடத்தியுள்ளதாக ட்ரூத் சோஷியல் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஃபோர்டோ மீது முழுமையான குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தங்களது அனைத்து விமானங்களும் அமெரிக்காவிற்குத் திரும்பி உள்ளதாகவும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் ஈரான் போரில் அமெரிக்கா தலையிடுமாயின் நிலைமை ஆபத்தானதாக இருக்கும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அறிவித்திருந்த பின்னணியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, ஈரானின் தெற்கு நகரமான பந்தர் அப்



பா
கள
ரே
து
உ

# இஸ்ரேல் மீது குண்டு

# பொழிந்தது ஈ

## நிலை தடுமாறியது டெ

(ஜெருசலேம்)

ஈரானின் இந்த தாக்குதலில் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தகவல்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏவுகணை தாக்குதல் தொடர்வதற்கு முன்னர் இஸ்ரேலில் உள்ள சைரன் ஒலிக்கும். ஆனால், சைரன் ஒலிப்பதற்கு முன்னரே இந்த முறை தாக்குதல் நடந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



மேலும், முதல் கட்ட ஏவுகணை தாக்குதலை முடித்துவிட்டதாகவும், இரண்டாம்

க
யி
த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# டையும் போர்!

# அணு உலைகளை

# து அமெரிக்கா!

**டன்)................................**
**உள்ள மூன்று அணுசக்தி நிலை**
**து அமெரிக்கா தாக்குதல்களை**
**தாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்**
**ளவார்.**





பாஸ் மீது புதிய தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. மத்திய ஈரானில் உள்ள ஈரானிய ஆயுதப் படைகளுக்குச் சொந்தமான போர் விமானங்கள் மற்றும் இராணுவ உட்கட்டமைப்பு ஆகியவற்றையும் குறிவைப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன.

அத்துடன் தங்களது மூன்று அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஈரானிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இஸ்ரேலிய இலக்குகள் மீது ஈரானும் தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# வெப்பக்காற்று பலூன் தீப்பற்றி விபத்து

- **8 பேர் உயிரிழப்பு**
- **பிரேசிலில் துயரம்**



(பிரேசிலியா)

பிரேசிலின் சாண்டா கேடரினா மாநிலத்தில் பிரியா கிராண்டே நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வெப்பக் காற்று பலூன் ஒன்று தீப்பிடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.


இந்த விபத்தில் வெப்பக் காற்று பலூனில் பயணம் செய்த 21 பேரில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதோடு, 13 பேர் காயமடைந்துள்ளனர். சாண்டா கேடரினா மாநில தீயணைப்புத் துறையின் தகவல்படி , சுற்றுலாவிற்குப் பயன்படுத்தப்பட்ட பலூன், காலை விமானப் பயணத்தின் போது திடீரென தீப்பிடித்தது. தீ விபத்துக்குப் பின்னர், பலூன் பிரியா கிராண்டே நகரில் தரையில் விழுந்தது. சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் உள்ளூர் மீட்புக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். காயமடைந்த 13 பேர் உடனடியாக சிகிச்சைக்காக அருகிலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து சுற்றுலாப் பயணிகளிடையே வெப்பக்காற்று பலூன்களின் பாதுகாப்பு குறித்து கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை, சாவ் பாலோ மாநிலத்தில் வானத்திலிருந்து மற்றொரு பலூன் விழுந்ததில் 27 வயது பெண்ணொருவர் உயிழந்ததோடு, 11 பேர் காயமடைந்ததாக உள்ளூர் செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# டு மழை !

# ஈரான் !

## டெல் அவிவ்



கட்ட தாக்குதலை தொடங்கியிருப்பதாகவும் ஈரானிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. இஸ்ரேலின் பென் குரியன் சர்வதேச விமான நிலையம் உட்பட 10 இடங்களை குறிவைத்து ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 23ஆக உயர்வடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று அதிகாலை, ஈரானின் ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹான் என மூன்று அணுசக்தி மையங்களின் மீது அமெரிக்கா தாக்குதலை நடத்தியிருக்கிறது.

தாக்குதலில் அனைத்து அணுசக்தி மையங்களும் அழிக்கப்பட்டுவிட்டது என்று ட்ரம்ப் கூறியிருந்தார். ஆனால், தாக்குதல் வெற்றிபெறவில்லை என்று ஈரான் கூறியிருக்கிறது. இதனையடுத்து இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதலை தொடங்கியிருக்கிறது. (நி)

# ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல் ஆபத்தானது!

## ஐ.நா கவலை



(ஜெனீவா)

ஈரான் மீது அமெரிக்காவின் தாக்குதல் ஆபத்தானது என ஐ.நா., பொதுச் செயலாளர் அன்டானியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

ஈரான் நாட்டின் 3 அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது குறித்து, அன்டானியோ குட்டரெஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது பிரச்சினையை மேலும் அதிகரிக்கும் செயல் ஆகும்.

அமெரிக்காவின் தாக்குதல் பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் ஆபத்தான நடவடிக்கை.

இந்த மோதல் எல்லையை மீறிச் செல்கிறது. இந்த தாக்குதல் மக்களுக்கும், உலகிற்கும் பேரழிவை ஏற்படுத்தும்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு நேரடி அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இந்த ஆபத்தான நேரத்தில், குழப்பமான சூழலைத் தவிர்ப்பது மிகவும் முக்கியம். இராணுவ நடவடிக்கை தீர்வு கிடையாது. ஒரே பாதை ராஜதந்திரம் தான். ஒரே நம்பிக்கை அமைதி தான் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக டிஜிற்றல் கற்றல்

## அறிமுகப்படுத்த திட்டம்

(கொழும்பு)

சகல பாடசாலைகளிலும் மனித மற்றும் பௌதிக வளங்களின் நியாயமான விநியோகத்தை உறுதி செய்யும் அதேவேளை டிஜிற்றல் கற்றல் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய வலியுறுத்தினார்.

உயர் கல்வி, கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சர் என்ற வகையில் பிரதமர், டிஜிட்டல் கல்வி நிலை மாற்றத்தை (வகுப்புகள் 6-13) மேற்பார்வையிட அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பணிக்குழுவுடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த கருத்துகளை வெளியிட்டார்.

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் தற்போது உள்ள 42,000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை அவசரமாக தீர்க்கப்பட வேண்டும்.

தற்போதுள்ள ஆசிரியர் பற்றாக் குறைக்கு தீர்வாக, தற்போதுள்ள வளங்களை திறம்பட பயன்படுத்தி கற்றல் இடைவெளியை குறைப்பதற்காக அடுத்த ஆறு மாதங்களுக்குள் டிஜிற்றல் கற்றல் முறைமைகளை அறிமுகப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த பணிக்குழுவின் முதன்மை நோக்கங்களில், மாற்றுத்திறனாளி சமுதாயம் உட்பட அனைத்துப் பாடசாலைகளுக்கும் வசதிகளின் சமமான விநியோகத்தை உறுதி செய்வது அடங்கும். இந்த இலக்கை அடைவதற்கு வலுவான, பல்துறை பணிக்குழு அவசியம் என்று பிரதமர் குறிப்பிட்டார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>12 இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Electric Planner (Swiss)<br>எதிர்பார்ப்பு: IT field<br>தொ.இ: B/15695 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 53<br>1 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, வெளிநாடு<br>தொ.இ: G/15252 |
| பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Sound Engineer<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/15696 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>8 இல் செவ்<br>கி.பா: 68 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA, MA, Project Assistant<br>எதிர்பார்ப்பு : அரச தொழில்<br>தொ.இ: G/15260 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 16<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:Engineer(France)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண் (France)<br>தொ.இ: B/15697 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BA, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/15242 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>2 இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15700 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: Civil Engineering, DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10704 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 47<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: ICT Officer (Gov)<br>எதிர்பார்ப்பு: அரச வேலை<br>தொ.இ: B/13458 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>8 இல் செவ்<br>கி.பா: 46<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bsc, ஆசிரியர்.<br>எதிர்பார்ப்பு: BSc, அரச உத்தியோகம்,<br>தொ.இ: G/15001 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 401



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஆத்திரத்தில் அர்த்தமில்லை

ஒரு முஸ்லீம் பெரியவர் இருந்தார். அனுபவசாலி. நிறைய விடயம் தெரிந்தவர். இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை அவர் பலபேருக்கு சொல்லிக் கொடுக்கின்ற தகுதி உள்ளவர்.

அந்தப் பெரியவரைத் தேடி ஒருநாள் ஒரு நபர் வந்தார். வந்தவர் மிகவும் படபடப்பாக வந்தார். முகத்தில் கோபம். வந்த வழியிலே யாரிடம் என்ன பிரச்சினையோ... யாருக்குத் தெரியும்?

வந்தவர் என்ன செய்தார் தெரியுமா?

காலில் இருந்த செருப்பைக் கழற்றி கோபமாக ஒரு மூலையிலே வீசி எறிந்தார்! கதவை வேகமாக "படார்" என்று மூடினார்.

கோபத்தில் இருக்கிறவர் இப்படித்தான் நடந்து கொள்ளுவார். சும்மா இருக்கின்றதையெல்லாம் தன்னுடைய ஜென்ம விரோதியாக நினைத்துக் கொண்டு தானே இவரும் இப்படி நடந்து கொள்ளுகிறார்.

அதற்குப் பின்பு அவர் மெதுவாக உள்ளே வந்தார்.

பெரியவர் முன்னாடி வந்து நின்றார். மரியாதை செலுத்தினார். உடனே இந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

"இதோ பாருப்பா.. உன்னுடைய மரியாதையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.. முதலிலே நீ போய் அந்த செருப்பிடமும், கதவிடமும் மன்னிப்பு கேட்டு விட்டு, அதற்குப் பின்பு இங்கே வா!" - என்றார்.

வந்தவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன இது.. இவர் இப்படி சொல்லுகிறார். செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்பு கேட்கின்றதா. அது எப்படி முடியும். அவை எல்லாம் என்ன உயிருடனா இருக்கின்றது. மன்னிப்பு கேட்பதற்கு?" என்று நினைத்தார். அதை அந்த பெரியவரிடமே கேட்டு விட்டார்.

"அவைகெல்லாம் உயிர் இல்லையே" என்றார். அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார். "நீ உன்னுடைய கோபத்தை அவைகள் மேலே காட்டுகின்ற போது இப்படி நினைக்கவில்லையே! அந்த செருப்பு இரண்டும் ஏதோ பெரிய தப்பு செய்த மாதிரி நினைத்து தூக்கி எறிந்தாய். கதவைப் போய் பெரிய விரோதியாக நினைத்துக் கொண்டு வேகமாக தள்ளினாய். உன்னுடைய கோபத்தைக் காட்டுவதற்கு மட்டும் அவைக்கெல்லாம் உயிர் இருக்கின்றதா நினைக்கின்ற போது,

மன்னிப்பு கேட்பதற்கும் அவைக்கெல்லாம் உயிர் இருக்கின்றதாகத் தான் நினைக்க வேண்டும்.." என்றார்.

பெரியவர் சொல்லுவதை மறுக்கக்கூடாது என்று நினைத்து அந்த செருப்புகளிடம் போனார். கும்பிட்டார்.

நண்பர்களே உங்களை அவமதித்து விட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள் என்றான்.

அடுத்தபடியாக கதவுகளிடம் சென்றார். ஏதோ கோபத்தில் உங்களைப் பிடித்து அப்படி வேகமாக தள்ளி விட்டேன். அதற்காக இப்போது வருத்தப்படுகின்றேன்!" என்றார்.

இப்படிக் கேட்டவுடனே அவன் மனம் மிகவும் லேசாக ஆகிவிட்டது. அமைதியும் சாந்தமும் கிடைத்துவிட்டது. இது அவனுக்கே ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.

ஒரு கதவிடமும் ஒரு ஜோடி செருப்பிடமும் மன்னிப்பு கேட்பதனாலே ஒரு மனிதன் இந்த அளவுக்கு அமைதியும் சந்தோஷமும் பெற முடியும் என்பதை அவன் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை.

அப்படி மன்னிப்புக் கேட்டதற்கு பின்பு அவன் மறுபடியும் உள்ளே போய் அந்த முஸ்லீம் பெரியவர் பக்கத்துலே உட்கார்ந்தார். இப்போது அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்.

இப்போது எல்லாம் சரியாகப் போய்விட்டது. இப்போது தான் நான் சொல்லுவதை நீ கேட்க முடியும். இனிமேல் நாம் பேசலாம்!" என்றார்.

"இப்போது நீ கொஞ்சம் அன்பு செலுத்தியதாலே உன்னுடைய பாரம் கொஞ்சம் குறைந்து விட்டது.

இனிமேல் நமக்கிடையில் நல்லதொரு தொடர்பு இருக்க முடியும்!" என்றும் சொன்னார். இதில் இருந்து என்ன தெரிகின்றது?

கோபம் வந்து விட்டால் செருப்புக்குக்கூட உயிர் இருக்கின்றதாக நினைத்து விடுகிறோம் என்கிறது தெரிகின்றதா இல்லையா?

கதவிடம் கூட கைகலப்புக்குத் தயாராகி விடுகின்றோம்.

நம்மில் சிலபேர் தொலைபேசியிடம் கூட கோபத்தைக் காட்டுவார்கள். திடீர் என்று கோபமாக அதை வைப்பார்கள்.

நாம் சரியில்லாததற்கு தொலைபேசி என்ன செய்யும்.. பாவம்!

நமது ஆள் ஒருத்தர் செருப்புக்கு மிகவும் மரியாதை கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு திருமண மண்டப வாசலிலே அவன் நின்று கொண்டிருந்தான்.

வெளியிலே வருகின்றவர்கள் காலையெல்லாம் விழுந்து அவர்கள் செருப்பைத் தொட்டு வணங்கிக் கொண்டிருந்தான்.

இந்தக் காலத்திலே இப்படியும் ஒரு ஆளா என்னு நினைத்துக் கொண்டே அருகில் சென்றேன்.

என் காலிலும் விழுந்தான். "ஏன் இப்படி செய்கிறாய்" என்று கேட்டேன். "என்னோட செருப்பு காணாமல் போய் விட்டது சார். எவன் அதை போட்டுக்கொண்டு வருகிறான் என்று தேடிக் கொண்டிருக்கின்றேன்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டுகளை மறுத்தார் மைத்திரி



(கொழும்பு)

அநுராதபுரத்தில் உள்ள எப்பாவல பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கீழ் ஒரு கட்டடத் திட்டத்திற்காக ஜனாதிபதி நிதியிலிருந்து ரூ. 27.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நிதி முறைகேடு தொடர்பாக தம்மை உட்படுத்த முயற்சிக்கும் ஊடக அறிக்கைகள் தவறானவை மற்றும் தவறாக வழிநடத்தப்படுகின்றன என்றும், இந்தக் கூற்றுக்கள் தவறான மற்றும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை என்றும் சிறிசேன தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு சிறிசேன பதவியில் இருந்த போது, பல்நோக்கு மண்டபம் கட்டும் போது நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறி, எஃப்.சி.ஐ.டி யில் முறைப்பாடு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரிடமிருந்து இந்தப் பதில் வந்துள்ளது. (நி)

# ஈரானில் சிக்கித்தவிக்கும் இலங்கையர்களுக்கு இந்தியா உதவி



(டில்லி)

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான இராணுவ சூழ்நிலை காரணமாக ஈரானில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கு உதவி வழங்க இந்தியா முன்வந்துள்ளது. இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட முறையான கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் நேற்று முன்தினம் இது குறித்த அறிக்கையை வெளியிட்டது.

அத்தோடு, ஈரானில் உள்ள நேபாள நாட்டினருக்கும் இந்தியா இதே போன்ற உதவியை வழங்குகிறது.

'ஆபரேஷன் இண்டஸ்' திட்டத்தின் கீழ் இரு அண்டை நாடுகளிலிருந்தும் குடிமக்களை வெளியேற்றும் பணி மேற்கொள்ளப்படுவதாக டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## பனம் பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical name- Borassus flabellifer

Family -Arecaceae

பூலோக கற்பக விருட்சம் என்று அழைக்கப்படும் பெருமையுடையது பனைமரம். வறட்சியை தாங்கி வளரக் கூடியது "தென்னையை வைத்தவன் தின்றுவிட்டு சாவான், பனையை வைத்தவன் பார்த்துக் கொண்டே சாவான்" என்பது கிராமத்து பழமொழி அதற்கேற்ப பனையின் வளர்ச்சி மெதுவாகவே இருக்கும்.

ஆனால் நூறு ஆண்டுகள் வரை பனை உயிருடன் இருக்கும் பனம் பழமானது. நார்ச்சத்தும், ஊட்டச்சத்துக்களும் நிறைந்த சத்துணவாகும். பனம்பழத்திலுள்ள நார்களினூடே சிவந்த ஆரஞ்சு அல்லது சிவந்த மஞ்சள் நிறத்துடன் கூடிய கெட்டியான சாறு கலந்திருக்கும். இந்தச் சாறு இனிப்புச் சுவையுடன் இருக்கும்.

பனம் பழத்தை அவித்தும், சுட்டும் சாப்பிடலாம். பனம்பழம் சிறந்த சத்துணவாகும். உயிர்ச்சத்துகள் நிறைந்தது. நார்ச்சத்து, புரதம், சோடியம், சர்க்கரை, பொட்டாசியம், தாம்பிரம், துத்தநாகம், உயிர்ச்சத்து A,B6,C போன்றவை அடங்கியதுதான் பனம்பழமாகும். உடலிற்கு குளிர்ச்சியைத் தரக்கூடியது. மிகக் குறைந்த அளவு கலோரிகளையும் அதிக அளவு பொஸ்பரஸ், கல்சியம் சத்துக்களையும் கொண்டுள்ள இப்பழம் உடலுக்கு வலுவைக் கொடுக்கக் கூடியது. எலும்புகள் வளர்ச்சிக்கும் உதவக் கூடியது. நார்ச்சத்தும், நீர்ச்சத்தும் அதிகம் என்பதால் மலச்சிக்கலை போக்கிறது.

உடலில் உள்ள கழிவுகளையும் நச்சுக்களையும் அகற்றி, குடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. அதனால்தான் வயிறு தொடர்பான நோய்களை குணப்படுத்தவும், அந்த நோய்களை குணப்படுத்தவும் உதவி புரிகின்றன. உடலின் வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்த உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்து சருமத்தை காக்கிறது. உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கக் கூடியது. மன அழுத்தத்தையும், மனப்பதட்டத்தையும் நீக்குகிறது. சரும நோய்களுக்கு இப்பழச்சாறு பூசினால் நிவாரணம் கிடைக்கும். இந்த பனம்பழத்தை பச்சையாக சாப்பிடக் கூடாது. நெருப்பு மூட்டி, சுட்டு, அதன் சதைப்பகுதியை மட்டும் சாப்பிட வேண்டும் அதாவது இப்பனம் பழத்தை நெருப்பில் சுட்டு வாட்டும் போதே, அதிலிருந்து வரும் வாசனை அந்தப் பகுதி முழுக்க ஈர்த்துவிடும், பழத்தை சுட்டு, அதிலுள்ள தோலை நீக்கிவிட்டு, உள்ளே மஞ்சளாக இருக்கும் பழத்தை மட்டும் சாப்பிட வேண்டும்.

இந்தப் பழத்தை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அளவோடு சாப்பிடலாம்.

பனம்பழத்தில் பொதுவாக பார்வைத் திறனை அதிகரிக்கும் உயிர்ச்சத்து A இப் பழத்தில் அதிகளவு காணப்படுகிறது.


பப்பாளிப்பழம், மாம்பழத்தை விட கூடுதலான உயிர்ச்சத்து C , கல்சியம் பனம்பழத்தில் காணப்படுகிறது.

பழுத்த பழங்கள் பித்தச்சாறுகள் சுரக்க உதவுகின்றன. உடலின் அதிகரித்த வெப்பத்தை குறைக்கக் கூடியது.

இயற்கையான குளிரூட்டியே பனம்பழமாகும். வெப்பகாலத்திற்கு உகந்த பழமுமாகும். பனம்பழத்திலுள்ள சாறிலிருந்து ஜாம், குளிர்பானங்கள், பலகார வகைகள், உணவுப் பொருட்கள் தயாரிக்கின்றார்கள். பனம்பழத்திலிருந்து யூஸ் தயாரிக்கலாம். நன்றாக விறகு தணலில் பனம் பழத்தை சுட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்போது நல்ல வாசனை வரும். கறுப்புத் தோலை நீக்கி பனம் சாற்றை எடுத்துக் கொள்ளவும். அதிலிருக்கும் நார்களை அகற்றி, தூய்மையான கறிக்கன் துணியில் வாத்து, நீரும், அளவான சீனியும் கலந்து யூஸாக தயாரித்துக் கொள்ளலாம்.

பார்வைக்கோளாறு இருப்பவர்களுக்கு இந்த யூஸ் சிறந்ததாகும். குமட்டல், ஒவ்வாமையை நீக்கும். சர்க்கரை அதிகரிக்கும் திறன் குறைவாக இருப்பதால் நீரிழிவு நோயாளிகள் சீனி சேர்க்காமல் அளவாக இந்த யூஸை பயன்படுத்தலாம். மலச்சிக்கல் நீங்கும். நிர்ப்பீடனம் அதிகரிக்கும். தமிழின் மதிப்புமிக்க சொத்துகளாக இலக்கியங்களில் பனை மரம் பதிவாகி இருக்கிறது. மாபெரும் இலக்கியங்கள் எல்லாம் பனை ஓலைகளில் தான் எழுதப்பட்டன. பனம்பழத்திலிருந்து ஒரு வித துணி சோப்பினை உருவாக்கினர். போர்க் காலங்களில் வேதியற் பொருட்களால் ஆன துணிசோப்புக்கள் கிடைக்காத போது பனம் பழங்களையே அதற்குப்பதிலாக பயன்படுத்தினர். பனம்பழத்திலிருந்து ஒருவித பற்பசையும் கண்டு பிடித்து அதையும் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.



பனம்பழத்திலிருந்து எடுக்கும் அத் தடித்த சாற்றினை பதப்படுத்தி பல விதமான,பல வகையான உணவுப் பொருட்களையும் செய்து பயன்படுத்தலாம். இவை எமது ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்ததாகும். என்றாலும் பனம் பழத்தை அளவிற்கு அதிகமாக பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

குறைந்த கலோரிகள் உள்ளதாலும், நார்ச்சத்து அதிகமாக உள்ளதாலும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் இப்பனம்பழங்களை சுட்டு பயன்படுத்தலாம். பனம்பழங்கள் இரத்தம் மற்றும் சிறுநீர் தொடர்பான வியாதிகளையும் குறைக்க வல்லது. உடற் சோர்வை குறைக்கக்கூடியது. இப்பனம்பழத்தின் களியை பயன்படுத்தி பனாட்டு, பாணிப்பனாட்டு என்னும் வகையான உணவும் பண்டமும் தயாரித்து பயன்படுத்தலாம். இவையும் மலச்சிக்கலை நீக்கி,குடலில் ஆரோக்கியத்தை மேம்படுத்தி உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் கூடிய எமது பாரம்பரிய ஆரோக்கிய உணவுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 804





உன் அம்மாவும் அப்பாவும் விடமாட்டார்கள். உன் தமையனும் விட மாட்டான். யாராவது ஓர் ஆண் பிள்ளையின் கழுத்தில் உன்னைக் கட்டி விட்டால்தான் அவர்களது மனது நிம்மதி அடையும். அப்படி நீ கல்யாணம் செய்துகொள்வது என்று ஏற்பட்டால் யாரை மணந்து கொள்ளப் பிரியப்படுகிறாய், சொல்லு!" "பெயரைக் குறிப்பிட்டுக் கேளுங்கள், அக்கா! சொல்லுகிறேன்!"

"சரி சரி, அப்படியே கேட்கிறேன் சிவபக்தியில் சிறந்த மதுராந்தகத் தேவரை மணந்துகொள்ள விரும்புகிறாயா? அல்லது வீரதீர பராக்கிரமங்கள் மிகுந்த ஆதித்த கரிகாலருக்கு மாலையிடப் பிரியப்படுகிறாயா?"

திடீரென்று மணிமேகலை எதையோ நினைத்துக் கொண்டவள் போல் கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய், மணிமேகலை? நான் பரிகாசம் செய்கிறேன் என்று எண்ணிக் கொண்டாயா? இந்த விடயத்தை முடிவு செய்வதற்காகவே என்னை உன் தமையன் இங்கே முக்கியமாக வரச் சொன்னான். இன்னும் சற்று நேரத்தில் கரிகாலர் இங்கே வந்துவிடக் கூடும். உன் தமையனும் வந்து விடுவான். உன் அந்தரங்கத்தை அறிந்து சொல்லுவதாக அவனுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன்" என்றாள் நந்தினி.

"என் அந்தரங்கம் இன்னதென்று எனக்கே தெரியவில்லையே, அக்கா! நான் என்ன செய்யட்டும்!"

"எதற்காகச் சிரித்தாய், அதையாவது சொல்!" என்று கேட்டாள் நந்தினி.

"மதுராந்தகர் பெயரைச் சொன்னதும் ஒரு விடயம் ஞாபகத்துக்கு வந்தது. நான்கு மாதத்துக்கு முன்பு அவர் இந்த வீட்டுக்கு ஒரு தடவை வந்திருந்தார். தாங்கள் வழக்கமாக வரும் மூடுபல்லக்கில் ஏறிக் கொண்டு ஒருவரும் பார்க்காமல் திரை போட்டுக் கொண்டு வந்தார். அந்தப்புரத்தில் எங்களுக்கு அந்த இரகசியம் தெரியாது. தாங்கள்தான் வந்திருக்கிறீர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். 'பழுவூர் ராணி ஏன் அந்தப்புரத்துக்கு வரவில்லை?' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டிருந்தோம். அக்கா! பெண்களைப் பெண்கள் கலியாணம் செய்து கொள்ள முடியாது என்று சற்று முன் சொன்னீர்கள் அல்லவா? மதுராந்தகரை நான் மணந்து கொள்வது ஒரு பெண்ணை மணம் புரிந்து கொள்ளுவது போலத்தான்!"

நந்தினி புன்னகை புரிந்து, "ஆம்! மதுராந்தகரை நீ விரும்பமாட்டாய் என்றுதான் நானும் நினைத்தேன். உன் அண்ணனிடமும் சொன்னேன். மதுராந்தகத்தேவர் முன்னமே என் மைத்துனர் மகளை மணந்து கொண்டிருக்கிறார். அவள் மிகவும் அகம்பாவக்காரி அவளுடன் உன்னால் ஒரு நாள் கூட வாழ்க்கை நடத்த முடியாது. அப்படியானால் இளவரசர் கரிகாலரிடம் நீ மனத்தைச் செலுத்தி விட்டாய் என்று சொல்லு!" என்றாள் நந்தினி.

"அப்படியும் சொல்ல மாட்டேன், அக்கா! அவரை நான் பார்த்ததே இல்லை, எப்படி என் மனம் அவரிடம் சென்றிருக்க முடியும்?"

"அடியே! இராஜகுலத்துக்குப் பெண்கள் பார்த்துவிட்டுத்தான் மனத்தைச் செலுத்துவது என்பது உண்டா? கதைகளிலும் காவியங்களிலும் சித்திரங்களைப் பார்த்துவிட்டும் கீர்த்தியைக் கேட்டுவிட்டும் காதல் கொண்ட பெண்களைப் பற்றி நீ அறிந்ததில்லையா?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அதிர்ஷ்டம் எப்படியும் வரும்



சித்தூர் என்னும் ஊரில் முனியன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு அப்பாவி குடியானவன். எது சொன்னாலும் நம்பி விடுவான். இதனால் நிறைய இடங்களில் ஏமாந்து விடுவான். அவனை பல பேர் ஏமாற்றிவிடுவர்.

முனியனுக்கு விவசாய வேலை மட்டும் தெரியும். அங்குள்ள விவசாய நிலங்களுக்கு விவசாய கூலியாகத்தான் செல்வான். அவன் மனைவியும் அவனோடு வேலைக்கு செல்வாள்.

அவன் மனைவிக்கு நாமும் சின்ன தோட்டம் ஒன்று வாங்கி அதில் விவசாயம் செய்து வாழ வேண்டும் என்று நீண்ட நாள் ஆசை.

அப்பொழுது விவசாயி ஒருவர் தன் மகளுடைய திருமண செலவுகளுக்காக இருபது செண்ட் தோட்டம் ஒன்றை விற்கப் போவதாக மற்றொரு நண்பரிடம்சொல்லிக் கொண்டிருந்தார். அதை கேள்விப்பட்ட முனியனின் மனைவிக்கு எப்படியாவது அதை நாம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டும் என்று ஆசை.

அந்த விவசாயிடம் சென்று அந்த இடத்திற்கு எவ்வளவு விலை என்று கேட்டாள். அவர் சொன்ன தொகை அவளிடம் இல்லை.

இருந்தாலும், அவர்களிடம் பசு மாடு ஒன்று இருந்தது. அதில் பால் கறந்து வரும் படியை எடுத்து சேமித்து வைத்திருந்தாள். ஆனால்,அந்த தொகை விவசாயி சொன்ன விலைக்கு காணாது.

சரி பசு மாட்டையே விற்று விடலாம், அதன் மூலம் கிடைக்கும் பணத்துக்கு இந்த இடத்தை வாங்கி விடலாம் என்று முடிவு செய்தாள்.

முனியனிடம் பசு மாட்டை கொடுத்து சந்தைக்கு கொண்டு போய் விற்று வரும் படி சொன்னாள்.

மறு நாள் முனியனும் பசு மாட்டை ஓட்டிக்கொண்டு சந்தைக்கு கிளம்பினான். சந்தை மூன்று மைல் தூரம் இருந்தது.

இவன் பசு மாட்டை ஓட்டி செல்வதை பார்த்த ஒருவன், முனியனை ஏமாற்றி விடலாம் என்று முடிவு செய் தான். அவன் ஆடு ஒன்றை ஓட்டிக் கொண்டு இவன் எதிரில் வந்தான்.

என்ன முனியா வத்தலும் தொத்தலுமா இருக்கின்ற மாட்டை ஓட்டி கிட்டு எங்க கிளம்பி விட்டிரே?

முனியனுக்கு அதிர்ச்சியாகி விட்டது. அவன் பசு மாடு நல்ல புஷ்டியாக இருக்கும். தினமும், அவனும், அவன் மனைவியும் வேலை முடிந்து வரும் போது அங்கிருக்கும் தீவன பயிர்களை கொண்டு வந்து பசு மாட்டுக்கு போட்டு வளர்த்து வந்தனர். என்ன அண்ணே இப்படி சொல்றீர்கள்? எங்கள் பசு மாடு நல்லாத்தானே இருக்கின்றது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு ஜனநாயக நாட்டுக்கும் ஒரே தலைவர் நீண்ட காலம் ஆட்சியில் இருப்பது நல்லதல்ல.
– நெல்சன் மண்டேலா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனிதரை மனிதர் அழிக்க மனிதரால் ஆக்கப்பட்ட அணுவாயுதம்

ஈரான் – இஸ்ரேல் யுத்தம் பேரழிவோடு நடந்து கொண்டிருக்கின்றது. இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல் வலிமையடைந்த போது, ஈரானின் அணுவாயுத உலைகள் மீது அமெரிக்கா நேற்றைய தினம் (22) அதிரடித் தாக்குதலை நடத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்தத் தாக்குதல் ஈரான் – இஸ்ரேல் என்ற இரு நாட்டு யுத்தத்தை பன்னாட்டு யுத்தமாக மாற்றப்போவதுதான் கொடுமையிலும் கொடுமை.

ஆம், ஈரானுக்கும் இஸ்ரேலுக்குமான யுத்தத்தைத் தடுத்து நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமை கொண்ட அமெரிக்கா, ஈரான் மீது ஒருபோதும் தாக்குதலை நடத்தியிருக்கக்கூடாது.

இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா அதனைப் பார்த்துக் கொண்டிராது என்றால், இஸ்ரேலைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் அமெரிக்காவிடம் இருந்திருக்க வேண்டும்.

ஆம், காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் என்பது அந்த மக்களை ஒட்டுமொத்தமாகக் கொன்று குவிப்பதாகும்.

உண்மையில் அமெரிக்கா உலக அமைதியை விரும்பியிருக்குமாயின், காஸா மக்களைக் காப்பாற்ற அந்த நாடு முன்வந்திருக்க வேண்டும்.

எனினும் அதனை அமெரிக்கா செய்யவில்லை.

தவிர, ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதையாவது தடுத்திருக்க வேண்டும். ஆனால் அதுவும் செய்யப்படவில்லை.

ஆக, ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் என்பது அமெரிக்காவின் கட்டளையோ என்று எண்ணுமளவுக்கு நிலைமையுள்ளது.

அதேசமயம் ஈரான் தொடர்பான அமெரிக்காவின் கணிப்பும் பிழைத்துவிட்டது.

ஆம், ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், ஈரான் வழிக்கு வரும் என்ற அமெரிக்காவின் கற்பனைக் கணிப்பே இத்துணை அவலத்துக்கும் காரணம் எனலாம்.

எதுஎவ்வாறாயினும் ஈரான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் உலக நாடுகளை இரண்டாகப் பிரித்து விட்டது. இனி ரஷ்யா, சீனா, வடகொரியா, யேமன் ஆகிய நாடுகள் ஈரானுடன் சேர்ந்து கொள்ள; அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்காக களமிறங்க மூன்றாம் உலகப் போருக்கான பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகிவிட்டன எனலாம்.

ஆம், ஈரானின் அணுவாயுத உலைகள் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா தொடர்ந்தும் தாக்குதலைத் தீவிரப்படுத்தவே செய்யும்.

இந்நிலையில் ஈரான் பதில் தாக்குதலை மேற்கொள்ள, அதனோடு உலக நாடுகள் கன்னை பிரிந்து உருத்திரதாண்டவம் ஆடும்.

என்ன செய்வது யுத்தத்தில் ஈடுபடுகின்ற நாடுகள் உருக்குலையைப் போகின்றன. இலட்சக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்து போவதும் தவிர்க்க முடியாததாகும்.

ஆம், அமைதியை ஏற்படுத்துமாறு பாப்பரசர் விடுத்த கோரிக்கை செவிசாய்க்கப்படவில்லை. அமைதிக்கான ஐ.நா சபை அமைதியாக இருக்கிறது.

அந்தோ! மனிதர்களை மனிதர்கள் அழிப்பதற்கான அணுவாயுதங்கள் வெடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடன் இரத்துச் செய்யுங்கள்

## நீதி அமைச்சர் ஹர்ஷனவுக்கு மனித உரிமை ஆணைக்குழு கடிதம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் மொஹமட் ருஸ்டி என்ற இளைஞர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் தங்களால் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை அண்மையில் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டது.

எந்தவொரு குற்றத்திற்கும் ஆதாரங்கள் இல்லாத போதிலும் ருஸ்டியை 14 நாட்கள் தடுத்து வைத்து "மதரீதியான கடும்போக்காளர்" எனச் சித்தரிப்பதற்கு முயற்சிக்கப்பட்டது.

அத்துடன் விடுவிக்கப்பட்டவுடன் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் வாராந்தம் முன்னிலையாதல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ் வைக்கப்பட்டார்.

இந்த நடவடிக்கைகள் ருஸ்டியின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவுள்ளது.

இதேவேளை மொஹமட் ருஷ்டியின் வழக்கானது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மிக மோசமான ஒடுக்குமுறைப் போக்கையும், சட்ட அமுலாக்க அதிகாரிகள் அச்சட்டத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு உள்ள சாத்தியப்பாட்டையும் தெளிவாகக் காண்பிப்பதாகவுமுள்ள அதே நேரம் குற்றம் தொடர்பான வரைவிலக்கணம், விசாரணைகளின்றி நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைப்பதற்கான சாத்தியம், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சந்தேகநபரை நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்த வேண்டிய அவசியமின்மை, பிணைக்கோரிக்கை நிராகரிப்பு மற்றும் பொலிஸாரிடம் வழங்கும் வாக்குமூலம் நீதிமன்றத்தினால் சாட்சியாக ஏற்கப்படல் ஆகிய ஐந்து விடயங்களும் இந்தச் சட்டத்தின் ஒடுக்குமுறைப் போக்குக்கான முக்கிய காரணங்களாக அமைந்துள்ளது.

இந்தக் காரணங்களுக்காகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் எனவும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (ந-7)

## பாழடைந்த வீட்டிலிருந்து கேரள கஞ்சா மீட்பு

(ஜா-எல)

ஜா-எல நிவாசிபுர பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனையின் போது பாழடைந்த வீட்டிலிருந்து கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின் போதே குறித்த வீடு அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன்போது 05 உரப்பைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 129 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காகக் கொழும்பு குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ந-7)

## துப்பாக்கி, வெடிமருந்துகளுடன் கந்தானையில் ஒருவர் கைது

(கந்தானை)

கந்தானைப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி, வெடிமருந்துகள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஏகல பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட தானியங்கி கைத்துப்பாக்கி, மெகசின்கள் மற்றும் 30 தோட்டாக்கள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிப்பீட்டர் துப்பாக்கி மற்றும் அந்தத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 10 தோட்டாக்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## சமூக ஊடகங்களில் அவதூறு சட்டமா அதிபர் சி.ஐ.டியில் முறைப்பாடு

### துரித விசாரணைகள் ஆரம்பம்

சமூக ஊடகங்களில் தமது பணியாளர்கள் மீது தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க மேற்கொண்ட முறைப்பாட்டை தொடர்ந்து குற்றப் புலனாய்வுத் துறையினர் துரித விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் குறிப்பாகப் பதவி உயர்வுக்காகக் காத்திருக்கும் மூத்த அதிகாரிகள் குறிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமைகள் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவருக்குப் பிணை வழங்குவதற்கு ஆதரவளித்ததாக ஒரு மூத்த அதிகாரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்த வழக்கின் விசாரணையின் போது பிணை விவகாரம் கூடப் பரிசீலிக்கப்படவில்லை என்பதை சட்டமா அதிபர் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பான வழக்கில், மூத்த அதிகாரி ஒருவர் பிரதிநிதித்துவப்படுத்துவதை சட்டமா அதிபர் தடுத்தார். அதற்குப் பதிலாக ஒரு இளைய அதிகாரியை அனுப்பினார் என்பது மற்றொரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் குறிப்பிட்ட நாளில் குறித்த மூத்த அதிகாரி உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாக சட்டமா அதிபர் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம், இந்த ஆண்டு இதுவரை மேல் நீதிமன்றங்களில் 600க்கும் மேற்பட்ட வழக்குகளைத் தாக்கல் செய்துள்ள நிலையில் இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்தின் பல வழக்குகளை சட்டமா அதிபர் பரிந்துரைத்துள்ள நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டுகள் வெளிப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 11

புருசோத்தமன்



பஞ்சவடி ஆஞ்சநேயர் ஆலயத்தில்

புதுச்சேரி பஞ்சவடி ஆஞ்சநேயர் ஆலயத்திற்குச் சென்ற போது அங்கிருந்த வலம்புரி மஹா கணபதிப் பிள்ளையாரின் கோலம் மனதை கொள்ளை கொண்டது.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆலயத்திற்கு வந்துள்ளார் என்றதும் ஆலய நிர்வாகிகளும் சிவாச்சாரியர்களும் சேர்ந்து கம்பவாரிதியை வரவேற்றனர்.

36 அடி உயரமான ஆஞ்சநேயரின் விஸ்வரூபம் எம்மை அறியாமலே வணங்கவும் வழிபடவும் வைக்க வல்லது.



சனீஸ்வரர் ஆலயத்தின் உச்சியில் அமர்ந்த பிள்ளையார்

ஆலய நிர்வாகிகள் கம்பவாரிதியை ஆலயத்தின் மூலஸ்தானப் பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அவரோடு யானும் செல்கின்ற பேறைப் பெற்றேன்.

அங்கு வழிபாடுகள் இடம்பெற்ற பின்னர் திண்டிவனத்தில் இருந்து புதுச்சேரி செல்லும் வழியில் டோல்கேட் என்ற இடத்தில் அமைந்துள்ள உலகிலேயே மிக உயரமான (27 அடி) விஸ்வரூப பஞ்சலோக சனீஸ்வர பகவான் ஆலயத்திற்குச் சென்றோம்.

27 அடி உயரமான சனீஸ்வரப் பெருமான் மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கின்றார்.

இதைவிட ஆலயத்தின் மேற்குப் பக்கமாக நவக்கிரக ஆலயம் அமைந்துள்ளது. மிகப் பிரமாண்டமான நவக்கிரக விக்கிரகங்கள். நடுப்பகுதியில் யாககுண்டம். பார்ப்பதற்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நாள்தோறும் அங்கு நவக்கிரக தோஷ நிவர்த்தி யாகம் நடைபெறுகின்றது.

இதற்கும் மேலாக, சனி தோச நிவர்த்தியின் பொருட்டு பூட்டுக்கள் வாங்கிக் கொடுக்கின்ற ஒரு நடைமுறையும் உண்டு.

அவ்விதம் நேர்த்தியாக வழங்கப்பட்ட பூட்டுக்கள் நவக்கிரக நாயகர்கள் அமைந்துள்ள இடத்தில் சனீஸ்வரனுக்கு முன்பாக உள்ள இடத்தில் வைத்து பூட்டப்படும். தங்களின் கஷ்டங்களை வைத்துப் பூட்டுவதாகப் பாவனை செய்கின்ற வகையில் இப் பூட்டுப் பரிகாரம் இடம்பெறுகிறது.

குறித்த விஸ்வரூப பஞ்சலோக சனீஸ்வரப் பெருமானின் ஆலயத்தில் அமையப்பெற்ற விக்கிரகங்கள் எல்லாமே மிகவும் உயர்ந்தவையாகவும் தெய்வாம்சம் பொருந்தியவையாகவும் இருப்பதைக் காணமுடிந்தது.

இதற்கும் மேலாக, ஆலய உள்வீதியில் உள்ள சுவர்களில் சித்தர் பெருமக்களின் சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமை அற்புதமான காட்சியாக அமைந்திருந்தன.



சனீஸ்வரர் ஆலய முகப்புத் தோற்றம்



சனீஸ்வரர் ஆலயத்திலுள்ள சித்தர் சிலைகள்

பொதுவில் சனீஸ்வரன் கோயில் என்றால் அது திருநல்லாற்றில் உள்ள சனீஸ்வரன் கோயிலையே எவரும் கூறுவர்.

ஆனால் புதுச்சேரி மாநிலத்தில் 27 அடி உயரமான சனீஸ்வரர் ஆலயம் அமைந்திருப்பதும் அங்கு தரிசனம் செய்யக் கிடைத்ததும் பெரும் பேறு என்றே கூற வேண்டும்.



சனிதோஷ நிவர்த்திக்கான பூட்டுப் பரிகாரம்

பொதுவில் புதுச்சேரிப் பயணத்தில் பஞ்சவடி ஆஞ்சநேயர் ஆலய தரிசனமும் சனீஸ்வரர் ஆலய வழிபாடும் மனதுக்கு இதமாக அமைந்திருந்தன.

அதேநேரம் சனீஸ்வரர் ஆலயத்தில் தினந்தோறும் நவக்கிரகதோஷ பரிகாரம் நடப்பதனால் போலும் அந்தணச் சிவாச்சாரியர்களும் அந்தண மாணவர்களும் நிறையவே காணப்பட்டனர்.

அதிலும் அந்தண மாணவர்கள், கூட்டம் கூட்டமாக இருந்து வேதபாராயணம் செய்வதையும் அவதானிக்க முடிந்தது.

இதைப் பார்த்த போது தான் எங்கள் மண்ணில் ஒரு சிவாச்சாரியர் பத்து ஆலயங்களில் புரோகிதம் செய்ய, அங்கு நூறு சிவாச்சாரியர்கள் ஓர் ஆலயத்தில் புரோகிதப் பணியில் ஈடுபட்டிருப்பதை கண்ணுற்ற போது அங்குள்ள ஆலய எழுச்சிக்கு அதுவும் ஒரு காரணம் என்பதை உணர முடிந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அணையா...

வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்பு நகரில் போராட்டம் ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டம் குறித்து தமிழரசுக் கட்சியில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஊடகங்களுக்குக் கருத்துரைத்ததாவது,

மட்டக்களப்பு, ஒந்தாச்சிமடம் கோட்டைக்கல்லாறு பாலத்துக்கு அருகாமையில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு தீப்பந்தங்கள் ஏந்தி இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதில் கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்து தமிழ் உறவுகளும் அனைத்து உணர்வாளர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று பகிரங்கமாக அழைப்பை விடுக்கின்றோம்.

செம்மணி மனிதப் புதை குழிக்குச் சர்வதேச நீதி கோரி "அணையா விளக்கு" போராட்டம் யாழ்ப்பாணத்தில் 23, 24 மற்றும் 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக - அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் மட்டக்களப்பில் இந்த மாபெரும் போராட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

அந்தவகையில் கட்சி பேதங்கள் இன்றி அனைத்து தமிழ் உணர்வாளர்களும் கலந்து கொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றேன் என்றார். (ந-7)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குறித்த விபத்துத் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்த நிலையில் கிளிநொச்சி விநாயகபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

படுகாயங்களுக்குள்ளான மற்றைய நபர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## எமது காணிகளை...

35 வருடங்களாக விடுவிக்கப்படாமல் உள்ள யாழ்ப்பாணம், வலி. வடக்கில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட 2400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரிய போராட்டம் நேற்று (22) இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

மயிலிட்டிச் சந்தியில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டத்தில் நேற்று 500இற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று, அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால், பாடசாலைச் சிறுவர்கள் கூட தமது பெற்றோருடன் பதாகைகளைத் தாங்கியவாறு, மூன்றாம் தலைமுறையாகத் தங்கள் நிலங்களுக்கான உரிமையைக் கோரிப் போராட்டத்தில் இணைந்திருந்தனர்.

மயிலிட்டி, பலாலி, அந்தோனிபுரம், காங்கேசன்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த முதியவர்கள், இளைஞர்கள், பெண்கள் எனப் பல தரப்பினரும் இத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள், போர் முடிவடைந்த பின்னரும் தங்கள் காணிகளை முழுமையாகப் பெறவில்லை. ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் காணி விடுவிப்பதாகக் கூறி சிறிய பகுதிகளை மட்டுமே விடுவித்துள்ளன. இதனால் வாடகை வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் காணி உரிமையாளர்கள் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

"அனைத்துக் காணிகளையும் உடனடியாக விடுவிப்போம்" என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம், ஆறு மாதங்களாகியும் பெரியளவில் காணி விடுவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டோர் கண்ணீருடன் தெரிவித்தனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இராணுவம் நிலங்களை வைத்திருப்பதாகவும், தற்போது அமைதியான சூழ்நிலை நிலவும் போதும் காணிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது மக்களைத் தொடர்ந்தும் அகதிகளாக்குகிறது எனவும் தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை கொண்டுள்ளதாகக் கூறும் புதிய அரசாங்கம் இப் போராட்டம் குறித்து கவனம் செலுத்தும்வரை இது தொடரும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டோர் உறுதிபடத் தெரிவித்தனர். (ந-7,33)

## யாழ். குடாநாட்டை...

இயல்பு நிலை சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக வீதிகளில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டதுடன் கடுங்காற்றுக் காரணமாக மரக் கிளைகள் முறிந்து விழுந்தமையால் சில இடங்களில் போக்குவரத்தும் சிறிது நேரம் தடைப்பட்டது.

பலத்த காற்றுக் காரணமாக மின்சாரமும் தடைப்பட்டது. யாழில் ஒரு பகுதியில் மின் கம்பத்தின் மீது பனை மரம் சரிந்து விழுந்ததாகவும் இதனால் ஏற்பட்ட மின் தடை சிறிது நேரத்தில் சீர் செய்யப்பட்டது.

இதேவேளை வீடுகளின் வெளிப்புறத்தில் இருந்த கதிரைகள், மரத்தளபாடங்கள், துவிச்சக்கரவண்டிகள் எனபனவும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன.

வீடுகளுக்கும் குறித்த மினி சூறாவளியால் தாக்கங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும் என கணிப்பிடப்பட்டுள்ள நிலையில், மினி சூறாவளியால் ஏற்பட்ட பொருட்சேத விபரங்கள் தொடர்பான தகவல்கள் இது வரை வெளியாகவில்லை.

மழையுடனான சூழ்நிலை நீடிக்கக்கூடிய வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ள நிலையில், பொது மக்கள் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறும் மின்சாரம் தடைப்படும் வேளைகளில், மின் கம்பங்கள், வடங்கள் சேத முற்றுள்ளமையை அவதானித்தால் மின்சார சபையின் துரித இலக்கமான 021 202 4444 என்ற எண்ணுக்கோ அல்லது தத்தம் பிரதேச மின்சார வாரியங்களையோ தொடர்பு கொண்டு உடன் அறியத் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-7,33)

## தோட்டக்...

என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுக் காலை அவரைக் காணாது உறவினர்கள் தேடிய வேளையே கிணற்றினுள் அவரது சடலம் கண்டறியப்பட்டது.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

මහජන සම්පත
திகதி 2025.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 5868
A 2 8 2 2 6 1
අත සම්පත
A 2 2 6 1
சீட்டிழுப்பு இலக்கம் 443
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1898
L 55 66 80 81 L
Double Chance 24807

மெகா பவர்
திகதி 22/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2216
Y 20 42 53 68 71
www.nlb.lk

ජය JAYA
திகதி 2025.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 0136
S 2 1 4 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4110
சீட்டிழுப்பு திகதி 22.06.2025
L 29 54 64 67
L
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 1177
மேடம் 19 42 46 51 மேடம்
10875 49

உத்தியோகபூர்வ முடிவுகள்
සුපිරි ධන සම්පත
22.06.2025 வெற்றி வாரம் 576
0 0 0 2 1 8 3
94558
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,714,155.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2842
சீட்டிழுப்பு திகதி 2025.06.22 தினம் ஞாயிற்றுக்கிழமை
31 41 42 76 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,008,457.60

சனிதா
திகதி 22.06.2025 வெற்றி வாரம் 5003
19 41 47 77 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,834,118.00
69351

சசிரி
வெற்றி வாரம் 710
சீட்டிழுப்பு திகதி 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை
28 39 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4554
சீட்டிழுப்பு திகதி 22.06.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
19 28 49 51 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
217378

லக்ன வாசனா
2018
22.06.2025
B 15 38 44 71 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.579,038,531.80

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை வெற்றி வாரம் : 2668
சீட்டிழுப்பு திகதி : 2025.06.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,104,884.00
09 17 21 66 D
560927

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை பெற்று உயர்ந்திடுக பதவியினால்
மாண்புடைய பிரதீப் செம்மலே...!!



Best Wishes

வலிகாமம் கிழக்கின் செயலரென நீயமர்ந்தே
வற்றாத ஊருணியாய் பயனளித்து நின்றாய்!
கலையாத பண்பாட்டு நெறியோடு நடந்து
தலையாய சேவையெனக் கடமைதனைப் புரிந்தே
அலைபாயா மனத்திறனால் அரசாங்க அதிபரென
ஆட்சியைச் சுமக்கின்ற யாழ்ப்பாணத் தலைவனானாய்!
மற்றவருக் கொளிவிளக்காய் திசையெங்கும் விளங்கி நீ
கொற்றவனாய் உயர்ந்திடவே வாழ்த்துகிறோம் வாழி வாழி!!

இரா.தில்லைராஜன்
நீர்வேலி வடக்கு

(4618)


# சகல பாடசாலைகளிலும் டிஜிட்டல் கற்கை முறைமைகள்

## அறிமுகப்படுத்த கல்வியமைச்சு திட்டம்



சகல பாடசாலைகளிலும் மனித மற்றும் பௌதிக வளங்களின் நியாயமான விநியோகத்தை உறுதி செய்யும் அதேவேளை டிஜிட்டல் கற்றல் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வலியுறுத்தினார்.

உயர் கல்வி, கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சர் என்ற வகையில் பிரதமர், டிஜிட்டல் கல்வி நிலை மாற்றத்தை (வகுப்புகள் 6-13) மேற்பார்வையிட அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பணிக்குழுவுடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

உரிய சவால்களை எதிர்கொண்டு தேவையான கொள்கைகளை செயற்படுத்த கல்வித்துறையில் டிஜிட்டல் நிலை மாற்றத்தை ஆரம்பித்தல் குறித்து இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் தற்போது உள்ள 42,000க்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை அவசரமாக தீர்க்கப்பட வேண்டும்.

தற்போதுள்ள ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக, தற்போதுள்ள வளங்களை திறம்பட பயன்படுத்தி கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்காக அடுத்த ஆறு மாதங்களுக்குள் டிஜிட்டல் கற்றல் முறைமைகளை அறிமுகப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்தப் பணிக்குழுவின் முதன்மை நோக்கங்களில், மாற்றுத்திறனாளி சமுதாயம் உட்பட அனைத்துப் பாடசாலைகளுக்கும் வசதிகளின் சமமான விநியோகத்தை உறுதி செய்வது அடங்கும். இந்த இலக்கை அடைவதற்கு வலுவான, பல்துறை பணிக்குழு அவசியம் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வின் போது பணிக்குழு அதிகாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதோடு பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி பணிக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். (ந-7)


உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3248)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2260/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-3248)


# மிினி சூறாவளியால் இடை நிறுத்தப்பட்ட இசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை நிகழ்வு திடீரென காற்றுடன் பெய்த மழை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மைய வளாகத்தில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை தென்னிந்திய இசை கலைஞர்களின் பங்கேற்புடன் இசை நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் இசை நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக, மங்கள விளக்கேற்றும் வேளை திடீரென கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தமையால், நிகழ்வுக்காக போடப்பட்டிருந்த கதிரைகள், அருகில் இருந்த பந்தல்களின் தகரங்கள் என்பன காற்றில் தூக்கி வீசப்பட்டமையால் பாதுகாப்புக் கருதி பார்வையாளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தமையால் நிகழ்வை ஒத்திவைப்பதாக ஏற்பாட்டளர்கள் அறிவித்துள்ளனர். (ந-7,33)

# மரண அறிவித்தல்

தோற்றம்: 18 - 01 - 1950



மறைவு: 21 - 06 - 2025

## நாகமுத்து நவரத்தினம்

(தொழிலதிபர் – நவரத்தினம் தச்சுத்தொழிலகம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து நவரத்தினம் அவர்கள் கடந்த (21.06.2025) சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நவரத்தினம் தச்சுத் தொழிலகம்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்
077 713 0872

(C-3246)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(C-3247)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

தேவை
மானிப்பாய்ப் பகுதியில் காணி விற்பனைக்கு இருந்தால் அறியத் தரவும்.
தொடர்புகளுக்கு :
077 077 4177
(1253)

விற்பனைக்குண்டு
Honda C90, XR 6618
நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு :
0777 66 71 36
(C-3250)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் இல.151, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org